மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: இதற்கு முன்னால் 6 மாதத்திற்கு ஒருமுறை ஹரிஜன நல இலாக்காவி லிருந்து தாழ்த்தப்பட்ட மக்களுக்குச் செய்தி தருகின்ற வகையில், நலத் திட்டங்களைப்பற்றி வெளியிடப்பட்டுக் கொண்டு வந்திருக் கின்றன. அதற்குப் பிறகு, ஒரு அட்மினிஸ்ட்ரேஷன் ரிப்போர்ட் என்ற வகையில் நிர்வாக அறிக்கை ஜி.ஓ.-வாக ஆண்டுக்கு ஒரு முறை வெளியிடப்பட்டு வந்தது. 1960-க்கு முன்னாலே இப்படிப் பட்ட வெளியீடுகள் நடத்தப்பட்டு வந்து, அதற்குப் பிறகு நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. மறுபடியும் வெளியிட அரசாங்கம் யோசனை செய்யலாம்.

திரு. வி. கே. கோதண்டராமன்: சார், தீண்டாமையை ஒழிப்ப தற்காக வேண்டி, பல கிராமங்களில் பல விழாக்கள் நடத்தப்படு கின்றன. அதேபோன்று, குறைந்தபட்சம் மாதத்திற்கு ஒருமுறை யாவது அந்தப் பத்திரிகை வெளியிடலாம். அப்படிப் பத்திரிகை வெளியிடுவதோடு, ரேடியோவில் தினந்தோறும் ஆஸ்திகப் பிரச் சாரம் மணிக் கணக்கில் நடைபெறுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது ஆலோசனை. அதுபற்றி மானியம் வரும்பொழுது அந்தக் கருத்துக்களைச் சொல்லுங்கள். கேள்வி நேரத்தில் சொல்லாதீர்கள்.

திரு. வி. கே. கோதண்டராமன்: கேள்வி நேரத்தில் கேட்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி நேரத்தில் கேட்கக் கூடாது.

திரு. வி. கே. கோதண்டராமன்: எனவே, ரேடியோவிலே கால் மணி நேரமாவது தீண்டாமை ஒழிப்பைப்பற்றிப் பிரச்சாரம் செய்ய ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: தீண் டாமை ஒழிப்புப் பிரச்சாரத்திற்காக அந்த இலாக்காவே பணியாற் றிக்கொண்டு வருகிறது. துண்டுப் பிரசுரங்கள் வெளியீடு செய்து வருகிறது. விழாக்கள், திரைப் படங்கள் மூலம் தீண்டாமை ஒழிப்புப் பிரச்சாரத்திற்காகப் பணியாற்றுகிறார்கள். மாத இறுதி யில் தீண்டாமை ஒழிப்பு நாள் கொண்டாடப்படுகிறது. விழாக்கள், துண்டுப் பிரசுரங்கள் வெளியிடுவதன் மூலமாகத் தீண்டாமை ஒழிப்புப் பிரச்சாரத்தை அந்த இலாக்கா மூலம் செய்து வருகிறார்கள். அப்படிப்பட்ட பிரச்சாரங்களை, சில குறிப் பிட்ட நாட்களில் தீண்டாமை ஒழிப்பைப்பற்றி இலாக்கா டைரக்டர் அவர்களெல்லாம் பேசிக் கொண்டுதான் வருகிறார்கள்.

Covered shed for Agricultural machineries in Cuddalore.

* 354. Q—THIRU K. SAHADEVA KANDER: Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare be pleased to state—

(a) Whether the Government has undertaken the construction of covered shed for the machineries of Agriculture Department at Cuddalore in South Arcot District; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: (அ) ஆம்.

(இ) கூரையுடன் கூடிய கொட்டகைகளை அமைக்க சுமார் ரூ. 1.66 லட்சம் செலவாகும். பதிவான ஒப்பந்தக்காரர்களிடமிருந்து ஒப்பந்தப் புள்ளிகள் கேட்கப்பட்ட பிறகு, அவை துறையினால் அமைக்கப்படும். தமிழ்நாடு சிறுதொழில்கள் கழகம், கூரை உட்பட இக் கொட்டகைகள் அனைத்தையும், உருவாக்குவதற்கான அமைப்புகளைத் தயாரித்து, அவற்றை வழங்கி அக் கொட்டகைகளை நிறுவும் பணியை மேற்கொள்ளும். இப் பணி, ஏற்கெனவே இக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

திரு. கே. சகாதேவக் கண்டர்: மதிப்பிற்குரிய பேரவைத் தலைவரவர்களே, இப்படிப்பட்ட கட்டடங்களைக் கூரைகளாகக் கட்டுவதைவிட, சிமெண்ட் மூலம் கட்டலாம். கூரைகளாக இருந்தால் ஒவ்வொரு ஆண்டிலும் திரும்பத் திரும்பச் செலவு செய்ய வேண்டி வரும். எனவே, இதை மாற்றி கல் கட்டடமாகச் செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்பிகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: இப்படிப்பட்ட கொட்டகைகளை அமைப்பதற்கே சுமார் 1.66 லட்சம் ரூபாய் செலவாகும் என்று மதிப்பிடப்படுகிறது. இன்னும் நிரந்தரமாக கல் கட்டடமாகக் கட்ட வேண்டுமென்றால் இன்னும் அதிகப்படியாகச் செலவாகும். நிதிநிலையை உத்தேசித்தும், மேலும் வெய்யிலுக்கும், மழைக்கும் பாதுகாப்பாகத்தான் இப்படிப்பட்ட கூரைகளை தவிர, நிரந்தரமாகச் செய்ய வேண்டுமென்றால் அதிகம் செலவாகும் என்பதால் குறைந்த செலவில் இப்படிப்பட்ட கொட்டகைகளை அரசாங்கம் ஏற்பாடு செய்து கொண்டு வருகிறது.

திரு. பி. எஸ். தனுஷ்கோடி: தலைவரவர்களே, இந்த விவசாய இயந்திரக் கருவிகள் பலயிடங்களிலும், மழையிலும், வெய்யிலிலும் இருந்து அந்தச் சாமான்கள் பூராவும் துருப் பிடித்து அதிக நஷ்டம் ஏற்படுகிறது. ஆகவே, மாவட்டவாரியாக ஒரு தொழிற்சாலைக் கட்டடம் கட்ட அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: இப்பொழுது, இதுபோல் நான்கு கொட்டகைகளுக்கு 6.64 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. அந்த நான்கில், கடலூரில் ஒன்றும், திருநெல்வேலி, கோயம்புத்தூர், சேலம் ஆகிய மாவட்டங்களில் ஒன்றாகவும் இப்பொழுது ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளுக்கு ஐ.ஏ.எஸ். அதிகாரிகள்

* 355 வினா.—**திரு. வி. கே. கோதண்டராமன்:** மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் நாட்டிலுள்ள எந்தெந்த கூட்டுறவு சர்க்கரை ஆலைகளுக்கு ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர் ?

(ஆ) அதற்கான காரணம் என்ன ?